ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 1641/44 - 2010 පෙබරවාරි 18 වැනි බ්‍රහස්පතින්දා - 2010.02.18
*1641/44 ஆம் இலக்கம் - 2010 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 18 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### *1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க, நகர அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டம்*

*3 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க, நகர அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக்கொண்டு, நகர மற்றும் புனிதப்பகுதி அபிவிருத்தி அமைச்சராகிய தினேஷ் சந்திர ரூபசிங்க குணவர்தன ஆகிய நான், இவ்வட்டவணை நிரல் I இல் குறிப்பிடப்பட்டுள்ளதும் அதன் நேரொத்த பகுதியின் II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள எல்லைகளையும் வரையறைகளையும் கொண்டுள்ளதுமான இடப்பகுதியை அபிவிருத்திக்குப் பொருத்தமென அபிப்பிராயப்படுவதனால், அப்பகுதியினை நகர அபிவிருத்திப் பகுதியாக இக்கட்டளை மூலம் பிரகடனப்படுத்துகின்றேன்.*

*தினேஷ் சந்திர ரூபசிங்க குணவர்தன,*
*நகர மற்றும் புனிதப் பகுதி அபிவிருத்தி அமைச்சர்.*

*"செத்சிறிபாய"*
*பத்தரமுல்லை,*
*2010, பெப்புருவரி 05.*

**அட்டவணை**

*மாலிகாதென்னை நகர அபிவிருத்திப்பகுதி*

*நிரல் I*

*ஊவா மாகாணம், பதுளை மாவட்டம், ஹாலியெல பிரதேச சபைப் பிரிவிலுள்ள ஹாலியெல பிரதேச சபையினுள் அடங்கியுள்ள கி. சே. பி. இல. 57 A பெரஹெட்டிய (பகுதி), கி. சே. பி. இல. 57B வபஸ்ஸவெல (பகுதி), கி. சே. பி. இல. 57H மாலிகாதென்னை (பகுதி), கி. சே. பி. இல. 55E ஹீனரங்கல (பகுதி) ஆகியவற்றின் சகல காணிப் பகுதிகளும், நேரெதிரே உள்ள நிரல் II இல் குறித்துரைக்கப்பட்டவாறு எல்லைகள் மற்றும் வரையறைகளாலும் சூழப்பட்டுள்ளன.*

*நிரல் II*

**வடக்கு :**

*ஊவா உயர்பீட பெருந்தோட்ட அடிப்பாதையின் மத்திய கோட்டோரமாக பண்டாரவளை- எற்றம்பிட்டி பிரதான வீதியின் நடுக்கோடும் ஊவா உயர்பீட பெருந்தோட்ட அடிப்பாதையின் நடுக்கோடும் சந்திக்கும் புள்ளியிலிருந்து வடகிழக்கே 80 மீ தூரத்திலுள்ள புள்ளியிலிருந்து, வடகிழக்கே ஹாலியெல பிரதேச செயலகப் பிரிவின் இறுதி கிராம மாதிரிப்பட இல. 17 இல் உள்ள காணித்துண்டு இல. 16 இன் வடக்கு எல்லையோரமாகக் கீறப்பட்ட கோடானது ஊவா உயர்பீட பெருந்தோட்ட புதிய பிரிவின் சேவை வீதியின் நடுக்கோட்டை அடையும் வரை ; பின்பு, தென்கிழக்கே கீறப்பட்ட நேர்கோடானது காணித்துண்டு இல. 37 இனது வடக்கு*

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

| *நிரல் I* | *நிரல் II* |
|---|---|

புள்ளியினை அடையும் வரை; பின்பு, தென்கிழக்கே காணித்துண்டு இல. 37 இனது கிழக்கு எல்லையோரமாகக் கீறப்பட்ட கோடானது காணித்துண்டு இல. 38 இனது வடக்கு எல்லையை அடையும் வரை; பின்பு, வடகிழக்கேயும் தென் கிழக்கேயுமாக காணித்துண்டு இல. 38 இனது வடக்கு எல்லையோரமாகக் கீறப்பட்ட கோடானது குறிப்பிட்ட காணித்துண்டு இல. 38 இனது கிழக்கு எல்லையினை அடையும் வரை; பின்பு, காணித்துண்டு இல. 38 இனது கிழக்கு எல்லையோரமாக தென்கிழக்கே கீறப்பட்ட கோடானது காணித்துண்டு இல. 40 இனது வடக்கு எல்லையினை அடையும் வரை; பின்பு, வடகிழக்கேயும் தென் கிழக்கேயுமாக குறிப்பிட்ட காணித்துண்டு இல. 40 இனது வடக்கு எல்லையோரமாகக் கீறப்பட்ட கோடானது அதே காணித்துண்டின் கிழக்கு எல்லையினை அடையும் வரை,

**கிழக்கு** :

கடைசியாகக் குறிப்பிட்ட புள்ளியிலிருந்து தென்மேற்கே காணித்துண்டு இல. 40 இனது கிழக்கு மற்றும் தெற்கு எல்லைகள் ஓரமாகக் கீறப்பட்ட கோடானது காணித்துண்டு இல. 44 இனது கிழக்கு எல்லையினை அடையும் வரை; பின்பு, தென்கிழக்கே மேற்குறிப்பிட்ட காணித்துண்டின் கிழக்கு எல்லையோரமாகக் கீறப்பட்ட கோடானது காணித்துண்டு இல. 9 இனது வடக்கு எல்லையினை அடையும் வரை; பின்பு, கிழக்கேயும் தென் கிழக்கேயும், தெற்கேயும், தென்மேற்கேயும் மற்றும் மேற்கேயுமாக காணித்துண்டு இல. 9 இனது வடக்கு எல்லையோரமாகக் கீறப்பட்ட கோடானது காணித்துண்டு இல. 48 இனது கிழக்கு மற்றும் வடக்கு எல்லைகள் சேரும் புள்ளியினை அடையும் வரை; பின்பு, தென்கிழக்கேயும் தெற்கேயும் தென் கிழக்கேயும் வடமேற்கேயும் மற்றும் தென்மேற்கேயுமாக காணித்துண்டு இல. 48 இனது கிழக்கு எல்லையோரமாகக் கீறப்பட்ட கோடானது கிரிந்த ஓடையின் நடுக்கோட்டை அடையும் வரை; பின்பு, வடகிழக்கே கிரிந்த ஓடையின் இறுதி கிராம மாதிரிப்பட இல. 50 இல் காட்டப்பட்டுள்ள நடுக்கோட்டோரமாகக் கீறப்பட்ட கோடானது காணித்துண்டு இல. 71 இனது வடக்கு மற்றும் கிழக்கு எல்லைகள் சந்திக்கும் புள்ளியினை அடையும் வரை; பின்பு, தென் மேற்கேயும், தென் கிழக்கேயும், வடமேற்கேயும், மேற்கேயும், தென்மேற்கேயும், தென்கிழக்கேயும் மற்றும் தென்மேற்கேயுமாக மேற்குறிப்பிட்ட காணித்துண்டு இல. 71 இனது கிழக்கு எல்லையோரமாகக் கீறப்பட்ட கோடானது காணித்துண்டு இல. 63 இனது வடக்கு மற்றும் கிழக்கு எல்லைகள் சந்திக்கும் புள்ளியினை அடையும் வரை; பின்பு, தென்மேற்கே காணித்துண்டு இல. 63 இனது கிழக்கு எல்லையோரமாகக் கீறப்பட்ட கோடானது காணித்துண்டு இல. 60 இனது வடக்கு எல்லைகள் சந்திக்கும் புள்ளியினை அடையும் வரை; பின்பு, தென்மேற்கே காணித்துண்டு இல. 60 இனது கிழக்கு எல்லையோரமாகக் கீறப்பட்ட கோடானது காணித்துண்டு இல. 57 இனது வடக்கு மற்றும் கிழக்கு எல்லைகள் சந்திக்கும் புள்ளியினை அடையும் வரை; பின்பு, தென்மேற்கே காணித்துண்டு இல. 57 இனது கிழக்கு எல்லையோரமாகக் கீறப்பட்ட கோடானது அதே காணித்துண்டின் தெற்கு எல்லையை அடையும் வரை; பின்பு, காணித்துண்டு இல. 57 இனது தெற்கு எல்லையோரமாக வடமேற்கே

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

*நிரல் I*

*நிரல் II*

*கீறப்பட்ட கோடானது காணித்துண்டு இல. 138 இனது மேற்கு எல்லையினை அடையும் வரை; பின்பு, தென் கிழக்கேயும், தென்மேற்கேயுமாக மேற்குறிப்பிட்ட காணித்துண்டின் மேற்கெல்லையோரமாகக் கீறப்பட்ட கோடானது அதே காணித்துண்டின் தெற்கு எல்லையை அடையும் வரை; பின்பு, தென் மேற்கே கீறப்பட்ட நேர்கோடானது பண்டாரவளை - எற்றம்பிட்டி பிரதான வீதியிலுள்ள பன்வேவா சந்தியினைக் கடந்து காணித்துண்டு இல. 55 இனது வடக்கு மற்றும் கிழக்கு எல்லைகள் சந்திக்கும் புள்ளியினை அடையும் வரை; பின்பு, தென்மேற்கே காணித்துண்டு இல. 55 இனது கிழக்கு எல்லையோரமாகக் கீறப்பட்ட கோடானது காணித்துண்டு இல. 51 இனது வடக்கு மற்றும் கிழக்கு எல்லைகள் சந்திக்கும் புள்ளியினை அடையும் வரை; பின்பு, தென்மேற்கேயும், தென்கிழக்கேயும் மற்றும் தென்மேற்கேயுமாக காணித்துண்டு இல. 51 இனது கிழக்கு எல்லையோரமாகக் கீறப்பட்ட கோடானது பெயரிடப்படாத நீரோடையின் நடுக்கோட்டை பண்டாரவளை- எற்றம்பிட்டி வீதியிலுள்ள பன்வேவா சந்தியின் நடுப்புள்ளியிலிருந்து தென்மேற்கே கீறப்பட்ட நேர்கோட்டில் 140 மீற்றர் தூரத்திலுள்ள புள்ளியை அடையும் வரை.*

**தெற்கு :**

*கடைசியாகக் குறிப்பிட்ட புள்ளியிலிருந்து தென் மேற்கேயும், மேற்கேயும், தென்மேற்கேயும், வடமேற்கேயும் மற்றும் தென்மேற்கேயுமாக மேற்குறிப்பிட்ட பெயரிடப்படாத நீரோடையின் நடுக்கோட்டோரமாகக் கீறப்பட்ட கோடானது 460 மீற்றர் தூரத்தில் ஒரு புள்ளியினை அடையும் வரை.*

**மேற்கு :**

*கடைசியாகக் குறிப்பிட்ட புள்ளியிலிருந்து வடமேற்கே 9 ஆவது பிரிவு பெருந்தோட்டத்திற்கு ஊடாக கீறப்பட்ட நேர்கோடானது பெறாஹற்டியா வீதி 9 ஆவது சந்தியின் நடுக்கோட்டினை அடையும் வரை; பின்பு, வடமேற்கே, வடக்கே மற்றும் மேற்கேயுமாக மேற்குறிப்பிட்ட வீதியின் நடுக்கோட்டோரமாகக் கீறப்பட்ட கோடானது பள்ளிவாசல் அருகேயுள்ள பெருந்தோட்ட சேவை வீதியினது நடுக்கோட்டினை அடையும் வரை; பின்பு, வடமேற்கேயும் வடகிழக்கேயுமாக பெருந்தோட்ட சேவை வீதியின் நடுக்கோட்டோரமாகக் கீறப்பட்ட கோடானது கந்தகும்புறமாறகஹா சந்தியின் நடுப்புள்ளியினை அடையும் வரை; பின்பு, வடகிழக்கேயும் தென்கிழக்கேயுமாக பெருந்தோட்ட சேவை வீதியின் நடுக்கோட்டோரமாகக் கீறப்பட்ட கோடானது பண்டாரவளை- எற்றம்பிட்டி பிரதான வீதியின் நடுக்கோட்டோரமாகக் கீறப்பட்ட கோடானது ஊவா உயர்பீட பெருந்தோட்ட அடிப்பாதையின் நடுக்கோட்டை அடையும் வரை; பின்பு, வடகிழக்கே மேற்குறிப்பிட்ட அடிப்பதையின் நடுக்கோட்டோரமாகக் கீறப்பட்ட கோடானது தொடக்க புள்ளியினை அடையும் வரை.*

*3- 158*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.